புத்தகத்தோட விலைக்கு மேல அஞ்சல் கட்டணம் தர வேண்டியிருக்கும். கால தாமதம் வேற. தமிழகத்தில வெளியாகுற பருவ இதழ்களுக்கு உலகம் முழுதும் வாசகர்கள் இருக்காங்க. ஆனா, சரியான நேரத்தில இதழ்கள் கிடைக்கிறதில்ல. இந்தச் சூழ்நிலையை மாத்தணும்னு நினைச்சேன்.

புத்தகங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு தர வேண்டியதும் பெரிய கடமை. ஓலைச்சுவடிகளைப் புத்தகமாக்கினது மாதிரி புத்தகங்களை கணினிமயப்படுத்தணும். சங்கப்பலகையை இந்த நோக்கத்தோடதான் தொடங்கினேன். இதை வடிவமைக்க 15 மாதம் ஆனது. சங்கப்பலகையில இப்போ 4000 புத்தகங்கள் விற்பனைக்கு வச்சிருக்கோம். நிறைய பருவ இதழ்களும் இருக்கு.



சங்கப்பலகைல புத்தகங்கள் வாங்கும் முறை ரொம்ப எளிது. முதல்ல பெயர், ஈமெயில் முகவரியை பதிவு செய்யணும். பதிவு உறுதியானவுடனே 'ரீடர்' என்கிற படிக்கும் புரோகிராமை டவுன்லோடு செய்யணும். அடுத்து எந்த புத்தகம் தேவையோ அதை தேர்ந்தெடுத்து கிரெடிட் அல்லது டெபிட் கார்டு மூலமா பணம் கொடுத்துட்டு டவுன்லோடு செஞ்சுக்கலாம். ஒரு புத்தகத்தை நிமிடத்தில வாங்கிடலாம். இன்னைக்குக் காலையில வெளியாகும் இதழை அடுத்த ஐந்து நிமிடத்தில லண்டன்ல படிக்க முடியும். டவுன்லோடு செய்த பிறகு வசதியான நேரத்தில் எத்தனை முறை வேண்டுமானாலும் படித்துக்கொள்ளலாம். இலவசமா டவுன்லோடு செய்து படிக்கவும் சில புத்தகங்கள் இருக்கு.

பதிப்பகங்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள் எல்லாருக்குமே இதில் பலன் உண்டு. வாசகர்களுக்கு அஞ்சல் செலவு, காத்திருத்தல் தேவையில்லை. பதிப்பகங்கள் அச்சாக்கத்துக்குதான் நிறைய செலவு செய்ய வேண்டி இருக்கு. ஆன்லைன் புக்ஸ்டோர்ல அச்சுச் செலவு இல்ல. உலகளாவிய மார்க்கெட்டுக்கு புத்தகங்கள் போறதால எழுத்தாளர்களுக்கும் பலன் உண்டு. குறைந்த காலத்திலேயே நாங்க எதிர்பார்க்காத அளவு வரவேற்பு கிடைச்சிருக்கு. 1 லட்சம் புத்தகங்கள் கொண்ட வெப் ஸ்டோரா இதை மாத்தப்போறோம்...'' என்கிறார் பார்த்தசாரதி.

பதிப்புத்துறையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றுள்ள சங்கப்பலகையை பார்க்க, படிக்க www.sangapalagai.com என்ற முகவரியை 'க்ளிக்' செய்யுங்கள்.

**– வெ.நீலகண்டன்**

படங்கள்: **ஆர்.சந்திரசேகர்**